2017 ஜூன் 24]

நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் கடந்த மாதம்தான், தாங்களே சென்று திறந்து வைத்திருக்கிறீர்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

வேளாண் பண்ணை

***12236—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் காக்குப்பம், இருவேல்பட்டு, வடக்கனந்தல் மற்றும் வானூர் ஆகிய நான்கு இடங்களில் மாநில அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட நான்கு இடங்களில் உள்ள மாநில அரசு விதைப் பண்ணைகள்மூலம் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் ஆதார விதைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே, செஞ்சி தொகுதியில் மேலும் ஒரு நவீன வேளாண் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஆகிய இரண்டு வட்டங்கள் உள்ளன. இப்பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் தங்கள் பிரதானத் தொழிலான விவசாயத்தைச் சார்ந்து வாழ்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை விதை சுத்திகரிப்பு செய்வதற்காக, விழுப்புரம் மாவட்டம், இருவேல்பட்டு, வடக்கனந்தல், வானூர் மற்றும் காக்குப்பம் போன்ற பகுதிகளுக்குச் சுமார் 70 கி.மீ. தொலைவு கடந்து, செல்ல வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 34 அரசு விதைப் பண்ணைகள், ஐந்து மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் ஒரு மாநில பயறு பெருக்கப் பண்ணை அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்திற்கு ஓராண்டிற்கான நெல் விதை தேவை 1,488 மெட்ரிக் டன். ஆனால், தற்போது 2,050 மெட்ரிக் டன் நெல் விதை கையிருப்பிலுள்ளது. சிறு தானியங்கள் விதை தேவை 36 மெட்ரிக் டன். ஆனால் 45 மெட்ரிக் டன் கையிருப்பு இருக்கிறது. பயறு விதை தேவை 400 மெட்ரிக் டன், ஆனால், கையிருப்பு 590 மெட்ரிக் டன் இருக்கிறது. ஆகவே, விழுப்புரம் மாவட்டத்திற்குத் தேவையான விதை அளவைவிட, அங்குள்ள 4 பண்ணைகளின்மூலம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளடங்கிய செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்குத் தனியாக நவீன வேளாண் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலிருந்து விதைப் பண்ணைகளுக்குச் செல்ல வேண்டிய தூரம் அதிகமாக இருப்பதால், அவசியம் தேவை என்கிறார். எனவே, அரசு நிலம் கிடைப்பதைப்பொறுத்து, அங்கு விதைப் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பரிசீலனைக்குக்

2017 ஜூன் 24]

கொண்டு சென்று, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஆகிய இரு வட்டங்களில், செஞ்சி, வல்லம் மற்றும் மேல்மலையனூர் ஆகிய ஒன்றியங்களில் சுமார் ஐம்பதாயிரம் ஹெக்டேரில் நெல், உளுந்து, மணிலா போன்ற தானிய வகைகள் நிகர சாகுபடி ஆகின்றன. மழைக் காலங்களில் சாகுபடி இரு மடங்காக அதிகரிக்கும். மேற்படி நிலங்களில் விளையும் பொருட்களை அதிகளவில் சாகுபடி செய்ய, நிகர சாகுபடி நிலங்களுக்கு அரசின் உத்தேச அளவுபடி மூன்றில் ஒரு பங்கு கொண்ட தரச் சான்று பெற்ற விதைகளை வழங்குவதற்கு செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை அல்லது விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட வேண்டுமென்றும், அதற்கேற்ற நிலங்கள் உள்ளன என்பதையும், உலகிற்கே உணவு அளிக்கின்ற விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, அதை நிறைவேற்றிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், அப்போதுதான் விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விவசாயிகளுக்காகவே முக்கியப் பங்காற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் இறப்பு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். விவசாயிகள் எந்த சூழ்நிலைகளில் இறந்திருந்தாலும், அவற்றைக் கருத்தில்கொள்ளாமல், அவர்களுடைய குடும்ப சூழ்நிலை, வறுமை நிலையைக் கருதி, 82 விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா மூன்று இலட்சம் ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

செஞ்சியில் தேவையான அளவு அரசு நிலம் இருந்தால், தேவையின் அடிப்படையில், அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அங்கு விதைப் பண்ணையும், விதை சுத்திகரிப்பு நிலையமும் அமைப்பதற்கான சூழ்நிலை வகுத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

86—

புதிய வட்டம்

***6160—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியிலுள்ள திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9—6—2003—ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவை பூர்த்தியாகாததால், திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கச் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.